தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சிவகங்கைப் பகுதியில் தாமதமாகத் தொடங்கியுள்ள விவசாயப் பணிகள்

சிவகங்கைப் பகுதியில் குறைவான மழை பெய்திருப்பதால் விவசாயிகள் தாமதமாக விவசாயப்பணிகளை தொடங்கியுள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கை ஒன்றியம் தவிர இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், சிங்கம்புணரி, திருப்பத்தூர் ஆகிய பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது. அதனால் விவசாயப் பணிகளை முன்னதாகவே அந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தொடங்கி விட்டனர். ஆனால் சிவகங்கை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் குறைவான மழையே பெய்துள்ளதால், சில பகுதிகளில் விவசாயப் பணிகளை விவசாயிகள் தாமதமாக துவங்கியுள்ளனர். சிவகங்கை அருகேயுள்ள விவசாயக் கிராமங்களாகிய பனங்காடி, வாணியங்குடி, முத்துப்பட்டி, இடையமேலூர், சாலூர் ஆகிய பகுதிகளில் விவசாயப் பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். சிவகங்கை அருகே சோழபுரம் பகுதியில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கூறுகையில், சோழபுரம் கண்மாய் முழுக் கொள்ளளவு எட்டிய காலங்களில் பாசனப் பரப்பில் 1,500 முதல் 2 ஆயிரம் ஏக்கர் வரை விவசாயம் செய்திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு மழையளவு குறைந்துள்ளது. கண்மாயில் கால் பங்கு தண்ணீர் தான் நிறைந்துள்ளது. அதனால் 150 ஏக்கர் பரப்பளவில்தான் விவசாயம் நடைபெறுகிறது. ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் பெய்யும் மழையை நம்பித்தான் விவசாய வேலைகளை துவக்கியுள்ளோம். மழைப்பொழிவு நன்றாக இருந்தால் மட்டுமே மகசூல் நல்லமுறையில் கிடைக்கும். தற்போது பெரியாற்றுக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டு இடையமேலூர் வரை வந்திருக்கிறது. தொடர்ச்சியாக தண்ணீர் திறந்துவிடும் பட்சத்தில்

சோழபுரம் கண்மாய் நிரம்புவதற்கு வாய்ப்புள்ளது. அந்த நம்பிக்கையில்தான் தற்போது விவசாயப்பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறோம் என்று தெரிவித்தனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.92, சென்னையில் ரூ.3.27.

## நெல் சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடு குறித்து செயல் விளக்கம்

நெல் சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்க முகாம் கிருஷ்ணகிரி அருகேயுள்ள கால்வேஅள்ளியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, கிருஷ்ணகிரி டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம் மூலம், காவேரிப்பட்டணம் அருகேயுள்ள கால்வேஅள்ளியில் நெல்சாகுபடியில் இயந்திர பயன்பாடுகள் குறித்த செயல்விளக்க முகாம் நடைபெற்றது. நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயார் செய்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை, கதிரடித்தல் போன்றவற்றில் இயந்திரங்களின் பயன்பாடு குறித்து செயல்விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தராஜ் தலைமை வகித்தார். இதில், இயந்திர பயன்பாட்டின் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது.

## விவசாயிகளின் வளர்ச்சிக்கு நலத் திட்டங்கள்: கிருஷ்ண பைரேகௌடா

கர்நாடகத்தில் விவசாயிகளின் வளர்ச்சிக்கு காங்கிரஸ் அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அந்த மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகெப்டா தெரிவித்தார். தும்கூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

விவசாயிகளின் நலன் கருதி அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அண்மையில் வேளாண் நலத் திட்டத்தை அரசு

செயல்படுத்தி உள்ளது. இதனால் சிறு, குறு விவசாயிகள் அதிக பயனடைவர். இந்தத் திட்டத்தில் விவசாயிகள் தங்களது நிலத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர் வளத்தை மேம்படுத்திக் கொள்வதோடு, சொட்டு நீர் பாசன வசதியை செய்து கொள்ள முடியும். அரசின் திட்டங்கள் பெரிய விவசாயிகளை மட்டுமே சென்றடைகிறது என்ற தவறானக் கருத்து மக்களிடையே உள்ளது. இதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்த மாநில அளவில் 186 வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு 50 சத நிதியையும், தர்மஸ்தலா கிராம வளர்ச்சி சங்கம் 25 சத நிதியையும் வழங்கும். சோதனை முயற்சியாக இதுவரை ரூ. 70 கோடி நிதி வேளாண் சேவை மையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வாசமில்லா மலரில் வருமானம் பார்க்கும் விவசாயி**



பனி மற்றும் மழைக்காலங்களில் பூக்காத மலர்களை, எளிமையான தொழில் நுட்பங்களின் மூலம் உற்பத்தி செய்து, மகசூலில் சாதனை படைத்து வருகிறார் பார்வை குறைபாடுள்ள விவசாயி திவ்யநாதன்.

திண்டுக்கல் மாவட்டம் தவசிமடையை சேர்ந்த திவ்யநாதன், 50, விவசாய குடும்பத்தை சேர்ந்தவர். தனக்கு சொந்தமான இரண்டரை ஏக்கர் நிலத்தை பல பகுதிகளாக பிரித்து காய்கறி, வாழை, தென்னை சாகுபடி செய்துள்ளார். வறட்சியினால், ஆழ்குழாய் கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டது. இதை சமாளிப்பதற்காக ஆங்காங்கே பெரிய அளவிலான தொட்டிகளை கட்டி, கிடைக்கும் தண்ணீரை சேகரித்தார். பயிர்கள் காய்ந்து போகாமல் இருப்பதற்காக அவ்வப்போது அவற்றின் மூட்டு பகுதியில் சிறிதளவு தண்ணீர் ஊற்றுவார். இதற்காக சிறிய குழாய்களை நிலங்களின் மேற்பரப்பில் அமைத்து அதில் பிளாஸ்டிக் வால்வுகளை பொருத்தியுள்ளார். திவ்யநாதனுக்கு திடீர் என்று பார்வையில் கோளாறு ஏற்பட்டது. எல்லாமே நிழலாக தெரிந்தாலும் மனம் தளராத திவ்யநாதன், குடும்பத்தினரை காப்பாற்றுவதற்காக மலர் சாகுபடியை துவக்கினார். குறிப்பாக பனி, மழைக் காலங்களில் மல்லிகை பூப்பதில்லை. இதற்கு மாற்றாக காக்கரட்டான் பூக்கும். இரண்டையுமே பெண்கள் தலையில் சூடுவர். மல்லிகையில் வாசமிருக்கும். அதேபோல் உள்ள காக்கரட்டானில் வாசமிருக்காது. ஏற்கனவே சாகுபடி செய்துள்ள நிலங்களில் 15 சென்ட்டினை மலருக்கென ஒதுக்கி அதில் இரண்டையும் சாகுபடி செய்தார். மல்லிகை சீசன் இல்லாத காலங்களில் விலை அதிகமாக இருக்கும். அவற்றை அவ்வப்போது கவாத்து செய்து, மேல்மட்ட செடிகளை ஒன்றாக கட்டி பந்தல் போல் அமைத்து, குழாய் தண்ணீரின் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை நிலைநிறுத்தி பூக்காத காலங்களிலும் மகசூலை பெற்று சாதனை படைத்துள்ளார். ஒவ்வொரு அறுவடையிலும் 120 மல்லிகை செடியிலிருந்து இவருக்கு ஒட்டுமொத்தமாக 17 கிலோ பூக்கள் கிடைக்கிறது. இதே அளவு மகசூல் காக்கரட்டானிலும் பெறுகிறார். விசேஷ நாட்களில் பூக்களின் விலை கிலோவிற்கு ஆயிரம் ரூபாய் வரை விற்கும். பார்வையில் குறைபாடு இருந்தாலும் சாதிக்க வேண்டும் என்ற

வெறியோடு, யாருடைய உதவியும் இல்லாமல் சுயமாக சம்பாதித்து தனது குடும்பத்தினரை காப்பாற்றி வருகிறார். இவருடன் பேச: 90473 07296. **- எம்.பி.அருள் செல்வன், திண்டுக்கல்.**

**<u>சின்ன சின்ன செய்திகள்</u>**



பெல்லாரி வெங்காயத்தில் அதிக விளைச்சல் பெற உத்திகள்:

தமிழ்நாட்டில் கோவை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெல்லாரி வெங்காயம் சாகுபடியாகிறது. விதைக்கு ஏற்ற சரியான பருவம் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நாற்று விட்டுப் பயிர் செய்தால் சிறப்பாக இருக்கும். ஏற்ற இரகங்கள் அக்ரி பவுண்டு, கருஞ்சிவப்பு, அல்கா கல்யாண். மார்ச் - ஏப்ரல் நாற்று விடும்போது நாற்றங்காலில் நோய் தாக்கும். நாற்று அழுகல் நுனிக்கருகல் நோய்கள் போன்றவை. எனவே தண்ணீர் தேங்காத நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். மேட்டுப்பாத்தி அமைக்க வேண்டும். 20 செ.மீ உயரத்தில் இருக்க வேண்டும். பாத்தியின் நீளம் 3 - 3 1/2 மீட்டர் அகலம் 30 செ.மீ. இருக்க வேண்டும். நல்ல மக்கிய தொழுஉரம் இட்டு கொத்தி விட வேண்டும். டிரைகோடெர்மா விரிடி 100 சதுர மீட்டருக்கு 15 கிராம் அளவில் இயற்கை உரத்துடன் கலந்து இட வேண்டும். 500 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர், 400 கிராம் பொட்டாஷ் உரம் இட வேண்டும். ஒரு கிலோ விதைக்கு திரம் 2 கிராம் என்ற அளவில் கணக்கிட்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். பாத்தியில் 5-7 செ.மீ. இடைவெளியில் கோடுகள் இருக்க வேண்டும். விதைகளை 2 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு 100 சதுர மீட்டர் போதுமானது. சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 300 சதுர மீட்டரில் 3 கிலோ

விதை கொண்டு நாற்றங்கால் அமைக்க வேண்டும். காய்ந்த சருகு அல்லது வைக்கோல் கொண்டு மூடாக்கு போட வேண்டும் விதைகள் முளைத்து வந்தவுடன் மூடாக்கினை அகற்றி விட வேண்டும். நாற்றழுகல் நோய் தென்பட்டவுடன் திரம் மருந்தினை தெளிக்க வேண்டும். 1 லிட்டருக்கு 3 கிராம் என்ற அளவில் 10 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். ரோகார் அல்லது மெடாசி ஸ்டாக்ஸ் போன்ற பூச்சி மருந்துகளைத் தெளிக்க வேண்டும். 1 லிட்டர் நீருக்கு 2 மிலி என்ற அளவில் நடவின் போது நாற்று 0.5 - 0.8 செ.மீ. விட்டத்துடன் பருமனாக இருக்க வேண்டும். 4 - 5 இலைகள் இருக்க வேண்டும். நாற்றுக்களைப் பறித்து 1 லிட்டர் நீருக்கு 1 கிராம் கார்பன்டாசிக் மானோகுரேஸ் 1 மிலி / லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து ஒட்டும் திரவம் சேர்த்து தெளிந்த பின் நடவு செய்ய வேண்டும். நாற்றுக்களை கவனத்துடன் தயாரித்தால் 7வது வாரத்தில் நாற்று நடவுக்கு தயார் ஆகி விடும். அடியுரமாக 45 கிலோ யூரியா, 400 கிலோ சூப்பர் பாஸ்பேட், 50 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். தவிர நன்கு மக்கிய தொழுஉரம் ஏக்கருக்கு 10 டன் இட வேண்டும். தொழுஉரத்தினை 20 கிலோ துத்தநாக சல்பேட்டையும் சேர்த்து இட வேண்டும். நாற்று நட்ட 30 நாட்கள் கழித்து 5 கிலோ யூரியா நன்கு பொடிசெய்த வேப்பம்புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும். தசகவ்யா ஒரு லிட்டர் நீருக்கு 3 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். 4-5 முறை தெளிக்கலாம். ஏக்கருக்கு 10 லிட்டர் அளவில் நீரிலும் கலந்து விடலாம். நடவு வயலில் 3-4 முறை உழுது 45 செ.மீ. இடைவெளியில் பார் அமைக்க வேண்டும். நாற்றுகளை பாரின் இருபுறமும் 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். 5-7 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். மாடித்தோட்டம் அமைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை : திறந்தவெளி மாடியில் தரை தண்ணீர் உட்புகாதவாறு இருக்க வேண்டும். வளர் ஊடகம் குறைந்த எடை கொண்டதாக இருக்க

வேண்டும். வளர் தொட்டிகள், பாத்திகள் அமைக்கும் போது மாடியின் மீது அதிக எடையை ஏற்றக் கூடாது. திறந்தவெளி மாடியின் மீது தண்ணீர் தேங்கி நிற்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வளர்தொட்டி பாத்தியின் அடிப்பகுதியில் அதிக தண்ணீரை வெளியேற்றுவதற்கு சிறிய துவாரம் இட வேண்டும். கூடுமான வரையில் குறைந்த செலவில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே மாடித்தோட்டம் அமைக்க வேண்டும். கோடைக்காலங்களில் கண்டிப்பாக நிழல்வலை மூடாக்கைக் கொண்டு மாடித்தோட்டத்தை அமைக்க வேண்டும். இரசாயன உரங்கள் பயிர்பாதுகாப்பு வேதிப்பொருட்கள் பயன்பாட்டினை கூடுமானவரை குறைத்துக் கொள்ள வேண்டும். இயற்கை முறையில் பயிர் பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டும். இயற்கை உரங்களான தொழுஉரம், மண்புழு உரம், வேப்பம் புண்ணாக்கு முதலியவற்றை பயன்படுத்தவும். நாற்று விடுதல் : தக்காளி, கத்தரி, மிளகாய், சின்ன வெங்காயம், குடை மிளகாய், முள்ளங்கி, முட்டைகோஸ், காலிபிளவர். விதை விதைத்தல் : வெண்டை, குத்து அவரை, முருங்கை, கொத்தவரை, கருவேப்பிலை, கொத்தமல்லி (விதையை இரண்டாக உடைத்து) கீரை, பாகல், வெள்ளரி, பீர்க்கன், புடலை போன்றவை. (தகவல் : முனைவர். சே.மாரியப்பன், தி.சரஸ்வதி, ஷோபா திலகமணியன், த.சுமதி, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோவை-641 003. போன் : 0422 - 661 1268.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

# <u>வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல்</u>



வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலானது பெங்களூரு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியில் உருவான தொழில்நுட்பமாகும். இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தேனி மாவட்டம் காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல்தயாரிக்கப்படுகிறது.

**பயன்கள் :** நுண்ணூட்ட குறைபாடு உடனே நிவர்த்தியாகிறது. உரத்தின் பயன்பாடு குறைகிறது. பயிரின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுகின்றது. நல்ல தரமான பெரிய வாழை குலை கிடைக்கிறது. வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் உபயோகிக்கும் முறை: வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் 50 கிராம், ஒரு ஷாம்பு பாக்கெட் மற்றும் ஒரு எலுமிச்சை பழத்தின் சாறு ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீர் கலந்து பயன்படுத்த வேண்டும். வாழை நட்ட ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது மற்றும் பத்தாவது மாதங்களில் வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலை தெளிக்க வேண்டும். வாழை குலை தள்ளிய பின்பு முதல் மற்றும் இரண்டாவது மாதத்திலும் குலைகளின் மேல் தெளிக்க வேண்டும். இந்த வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலை

பூச்சிக்கொல்லி மருந்துடன் சேர்த்தும் தெளிக்கலாம். தாமிரம் கலந்த பூஞ்சாணக்கொல்லி மருந்துடன் மட்டும் கலந்து தெளிக்க கூடாது. வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் கரைசலை காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 6.30 மணி வரையிலும் தெளிக்க சிறந்தது. இலையின் அடிப்பகுதி முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். குலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். காலாவதி நாள் : உற்பத்தி நாளிலிருந்து 1 வருடம் வரை அளவு:1கிலோ

விலை:ரூ.125 இந்த வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலை சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ப.மாரிமுத்துவை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அலைபேசி :9442025109)-மூ.புவனா,பெ.இலக்கியா, வெ.கோமதி,ஐ.ஓபுசுமதி, சு.பவித்ரா,ரா.க.பிரியங்கா, திருச்சி மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள். 96776 35305, 80983 64771

**<u>நவம்பரில் மாடுகள் கொள்முதல் துவக்கம்</u>**

வாலாஜாபாத் : காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், கடந்த செப்டம்பர் மாதம், 7வது கட்ட கோமாரி தடுப்பூசி போடும் பணியால், இலவச கறவை மாடு வழங்கும் திட்டத்திற்கு மாடுகள் கொள்முதல் செய்யும் பணியை, கால்நடை துறை, தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. கடந்த மாதம் 21ம் தேதியுடன் தடுப்பூசி பணி நிறைவடைந்த நிலையில், பயனாளிகளுக்கு வழங்குவதற்காக, நவம்பர் 1ம் தேதி முதல் கறவை மாடுகளை கொள்முதல் செய்ய கால்நடை துறை அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். மேலும், பயனாளிகளை இறுதி செய்வதற்கு, இம்மாதம் 24, 25, 26 ஆகிய மூன்று தேதிகளில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தி,ஒப்புதல் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது என, கால்நடை துறை இணை இயக்குனர் தெரிவித்தார்.

## காளான், கறவை மாடு வளர்க்க பயிற்சி

திருவள்ளூர் : இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, இலவச வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி துறை மற்றும் மாநில அரசுடன் இணைந்து, திருவள்ளூர் இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, மதிய உணவுடன் இலவச வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. திருவள்ளூர், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளலாம். ஆர்வமுள்ளவர்கள், 044 - -2764 5060, 94443 99892 தொலைபேசியிலோ அல்லது இயக்குனர், இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (இந்த் செட்டி), ஈக்காடு (பழைய எஸ்.பி., ஆபீஸ்), திருவள்ளூர் என்ற முகவரியில் நேரில் வந்தோ பதிவு செய்து கொள்ளலாம் என, பயிற்சி நிறுவன இயக்குனர் புருஷோத்தமன்தெரிவித்துஉள்ளார். பயிற்சியின் பெயர் பயிற்சி காலம் காளான் வளர்ப்பு 3.11.14- 8.11.14 கறவை மாடு வளர்ப்பு 10.11.14 - 15.11.14 இயற்கை விவசாயம் 17.11.14 - 22.11.14

## துவரை நடும் முறை விவசாயிகளுக்கு பயிற்சி

திருத்தணி : மானிய விலையில் வழங்கிய துவரை விதைகள் நடும் முறை குறித்து, விவசாயிகளுக்கு, வேளாண் துறை அதிகாரிகள், செயல்முறை பயிற்சி அளித்தனர். திருத்தணி ஒன்றியத்தில், 98 விவசாயிகளுக்கு, தேசிய வேளாண்மை பெருக்குத் திட்டத்தின் கீழ், 100 சதவீதம் மானிய விலையில், துவரை விதைகள், உயிர் உரங்கள் வழங்கப்பட்டு உள்ளன. 2.47 ஏக்கருக்கு, 7,500 ரூபாய் மதிப்புள்ள விதைகள் மற்றும் உரங்கள், இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.மொத்தம், 242 ஏக்கர் பரப்பில், விவசாயிகள் துவரை பயிரிட்டுள்ளனர். இந்நிலையில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தர்ராஜன், துணை இயக்குனர் பாபு

மற்றும் திருத்தணி உதவி இயக்குனர் பிரசாத் ஆகியோர், நேற்றுமுன்தினம், திருத்தணி ஒன்றியம், வி.கே.என்.கண்டிகை, டி.சி.கண்டிகை பகுதியில் துவரை பயிரிட்ட விவசாயிகளுக்கு, துவரை நடும் முறை குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 17ம் தேதி நடக்கிறது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 17ம் தேதி, காலை 11:00 மணிக்கு, ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் நடக்கிறது.கூட்டத்தில், வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மைப் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை உள்ளிட்ட, வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு, மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>கருப்பு தேயிலைக்கு கடும் கிராக்கி; நீலகிரி உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி</u>

குன்னுார் : கருப்பு தேயிலைக்கு உலக அளவில் ஏற்பட்டுள்ள கிராக்கியால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உலகளவிலான தேயிலை தொழிலில், நடப்பாண்டில், முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதை சார்ந்துள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் பயனடைந்து வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது.இதற்கு தேயிலை துாளின் பயன்பாடு அதிகரித்துள்ளதும் முக்கிய காரணமாகும். கருப்பு தேயிலையை அனைத்து தரப்பினரும் விரும்பி பயன்படுத்துவதால் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டு இந்தியாவில் மட்டும் 9 சதவீதம்

கருப்பு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இதன் உற்பத்தி 15 சதவீதமாக உயர்ந்துள்ளது. 'கடந்த 8 மாதங்களில் கென்யா ஏல மையத்தில் 90 சதவீதம், இலங்கையில் 95 சதவீதம், இந்தோனேஷியாவில் 78 சதவீதம்' என வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் தேயிலை தூள் விற்பனையாகி உள்ளது.இந்தியாவில் உள்ள 8 ஏல மையங்களில் கருப்பு தேயிலைக்கு கிராக்கி நிலவி வருகிறது. 'அனைத்து பகுதிகளிலும் தேயிலைக்கு சாதகமான சூழல் இருப்பதால் நடப்பாண்டின் இறுதியில் தேயிலை தூள் உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது' என, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். தேயிலை வாரிய உதவி இயக்குனர், ரமேஷ் கூறுகையில், "பொதுவாக கருப்பு தேயிலை தூள், சி.டி.சி., மற்றும் ஆர்த்தோடக்ஸ் என்ற இரண்டு முறைகளில் தயாரிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுக்கு, 100 மில்லியன் கிலோ கருப்பு தேயிலை தயாரிக்கப்படுகிறது. தென்னிந்திய அளவில், 240 மில்லியன் கிலோ உற்பத்தி செய்யப்படுகிறது. சர்வதேச சந்தையில், கருப்பு தேயிலைக்கு நல்ல கிராக்கி இருப்பதால், இந்த தேயிலையை உற்பத்தி செய்ய, புதிய தொழிற்சசாலை நிர்வாகங்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றன," என்றார்.

<u>**தேயிலை தொழிற்சாலை அங்கத்தினர்கள் மகிழ்ச்சி**</u>

மஞ்சூர் : பசுந்தேயிலை கொள்முதலில் பிடித்தம் செய்த 17 லட்சம் ரூபாய் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டது. மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் இப்பகுதியை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்களது தேயிலை தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலையில் கிலோவிற்கு 50 பைசா வீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகை ஆண்டு தோறும் தீபாவளி பண்டிகை சமயத்தில் அங்கத்தினர்களுக்கு திரும்ப வழங்கப்படுகிறது.இந்நிலையில்,

நடப்பாண்டின் பிடித்த தொகை அங்கத்தினர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி தொழிற்சாலை வளாகத்தில் நடந்தது. தொழிற்சாலை நிர்வாக குழு தலைவர் பீலன், துணைத் தலைவர் ராமன் முன்னிலை வகித்தனர். தொழிற்சாலை மேலாண்மை இயக்குனர் அருணாச்சலம் பிடித்தம் செய்யப்பட்ட மொத்த தொகை 17 லட்சம் ரூபாய் உறுப்பினர்களுக்கு வழங்கினார். இதனால், அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## <u>தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயனடையலாம் : கலெக்டர் தகவல்</u>

ராமநாதபுரம்: கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது: நடப்பாண்டு 2014-15ம் ஆண்டு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் நெல் மற்றும் அனைத்து விதமான உணவுப் பயிர்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வருடாந்திர வணிக தோட்டக்கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகிறது. வெள்ளம், வறட்சி, பூச்சிகள், நோய்கள் மற்றும் அனைத்து விதமான இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு இத்திட்டம் மூலம் காப்பீடு வழங்கப்படவுள்ளது. வங்கி கடன் பெறுவோர் மற்றும் வங்கி கடன் பெறாதோர் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம். பிரீமிய தொகையில் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 35 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதமும் மானியம் வழங்கப்படும். மானிய தொகை போக நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் ரூ. 115ம், இதர விவசாயிகள் ரூ. 128ம் பிரீமியமாக செலுத்த வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் நவ., 15க்குள்ளும், கடன் பெறும் விவசாயிகள் நவ., 30க்குள்ளும் பிரீமிய தொகை செலுத்த வேண்டும். மேலும், காப்பீடு செய்வதற்கான பிரீமிய தொகையினை தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம், தேசிய வங்கிகளில் செலுத்தலாம். இதற்கான விண்ணப்பங்கள் மற்றும் கூடுதல்

விபரங்களை அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் பெறலாம், என்றார்.

## <u>விவசாயிகளுக்கு பயிற்சி</u>

காளையார்கோவில்: காளையார்கோவில் அருகே மந்திக்கண்மாயில், நிலக்கடலை சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது. சாகுபடி முறை, விதை நேர்த்தி, உயிர் உரங்கள் இடுவது குறித்து பயிற்சி அளித்தனர். வேளாண்மை துணைஇயக்குநர் கணேசன், உதவி இயக்குநர் மோகன்தாஸ் சவுமியான், மாவட்ட நீர்வடிபகுதி துணை இயக்குநர் செல்வபாண்டி, வேளாண்மை அலுவலர் பாரதி, <உதவி வேளாண்மை அலுவலர் ஜெயசுதா, லலிதா, செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பரமசிவம், தொழில்நுட்ப இயக்க மேலாளர் ரங்கசெல்வி, வல்லுநர்கள் காளிதாஸ், கார்த்திக்குமார் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>உற்பத்தி குறைவால் தேயிலை விலை மேலும் உயர வாய்ப்பு</u>




கொல்கத்தா: தேயிலை வாரியம் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, நடப்பு ஆண்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் வரையிலான 8 மாதங்களில் வடமாநில பகுதியில் தேயிலை உற்பத்தி 54.36 கோடி கிலோவாகவும்,

தென்னிந்தியாவில் இது 15.84 கோடி டன்னாகவும் இருந்தது. முந்தைய ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடுகையில் வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 1.8 கோடி கிலோ உற்பத்தி குறைந்துள்ளது. தென்னிந்திய பகுதிகளில் உற்பத்தி சற்று கூடியிருந்தாலும், இந்திய அளவிலான மொத்த தேயிலை உற்பத்தி 72 லட்சம் கிலோ குறைந்துள்ளது. இதனால் தேயிலை தட்டுப்பாடு ஏற்பட்டு விலை 10 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காசு பார்க்க கம்பு பயிரிடலாம்**

பழநி, : காசு அதிகம் சம்பாதிக்க கம்பு பயிரிடலாம் என்று வேளாண்மை துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பருவமழையால் விவசாய பணிகள் துவங்கி உள்ளன. தற்போது இறவை பாசன வசதி உள்ள விவசாயிகள் கம்பு பயிரிடுவது ஏற்ற தருணமாகும். கோ-7, கோ (சியு) 9, ஐசிஎம்வி-221, ராஜ்-171, எக்ஸ்-7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை தேவை ப்படும். நாற்றாங் கால் எக்டேருக்கு 7.5 செ ன்ட் அள விற்கு இருக்க வேண்டும். எக்டேருக்கு 750 கிலோ தொழுஉரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்க நல்ல தண்ணீர் கொண்டு 3-4 முறை விதைகளை கழுவி பின்பு நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளை ப்பான் நோய் தாக்காமல் இருக்க குளோரிபைபாஸ் 36 டபிள்யூ.எஸ்.வி அல்லது பாசலோன் 35 இசி 4 மில்லியுடன் 5 கிராம் பசை இவற்றை 20 லிட்டர் தண் ணீரில் கலந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் தாக்காமல் இருக்க மெட்டலாக்சில் 6 கிராம் உடன் 5 மில்லி தண்ணீர் கலந்து 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும். விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடு கள் இட்டு, 1 படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை

விதைத்தவுடன் தூவி எறும்புகளிலிருந்து பாதுகாக்கலாம். நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் கலந்து தூவி விட வேண்டும். 30 செண்டி மீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிக்கொள்ளும் வரை மட்டும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். 6 மீட்டர் உள்ள பார்கள் 45 செண்டி மீட்டர் இடைவெளியில் அமைக்க வேண்டும். வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியபடி உரங்கள் இட வேண்டும். இதுதொடர் பான கூடுதல் விவரங்களு க்கு விவசாயிகள் அந் தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள் ளலாம் என வேளாண்துறை யினர் தெரிவித்துள்ளனர்.

## <u>ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் மண்புழு உரக்கூடம் கட்டும் பணி தீவிரம்</u>

சின்னமனூர், : குச்சனூரில் ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் மண்புழு உரம் தயாரிக்கும் கூடம், பிளாஸ்டிக் சாலை தயாரிப்பு மூலப்பொருட்கள் அறை கட்டுமான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. சின்னமனூர் அருகே குச்சனூர் பேரூராட்சி உள் ளது. இங்கு சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். குச்சனூர் - சங்கராபுரம் இணைப்பு சாலையில் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு சாலை அமைக்க பயன்படும் மூலப்பொருட்களை தயாரிக்கவும், அதே கழிவுகளால் மண்புழு உரம் தயாரிக்கும் கூடமும் அமைக்கப்படுகிறது. சாலையிலிருந்து கம்போஸ்ட் செல்லும் 300 அடி பாதையின் இருபுறங்களிலும் பேவர்பிளக் சாலையும் அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்காக திடக்கல்வி மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.17 லட்சம் ஒதுக்கப்பட்டது. மேலும் 300 அடி சாலையின் இருபுறமும் தடுப்புகளை உயர்த்தி பேவர்பிளக் அமைக்கும் பணிகளும் நடந்து வருகின்றன. இப்பணிகள் ஒரு மாதத்தில் நிறைவடையும் என பேரூராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**<u>கேரளாவில் கொட்டும் மழை பூவன்??வாழைப்பழ வரத்து அதிகரிப்பு</u>**

கம்பம், : கேரளாவில் பெய்து வரும் பலத்த மழையால் தேனி மாவட்டத்திற்கு பூவன் வாழைப்பழ வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் தேனி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கேரளாவில் அடர்ந்த மலைப்பகுதி, மழை வளம் அதிகமாக உள்ளதால் பெரும்பாலான தோட்டங்கள், வீடுகளில் வாழை வளர்ப்புக்கு முக்கிய பங்குண்டு. இடுக்கி மாவட்டத்தில் உடுப்பஞ்சோலை, வண்டிபெரியாறு, கட்டப்பனை உள்ளிட்ட எல்லா ஊர்களிலுமே வாழை தோட்டங்கள் உள்ளன. இங்கு விளையக்கூடிய நாளிப்பூவன் பழத்திற்கு தேனி மாவட்டத்தில் அதிக கிராக்கி உள்ளது. சிறிய வடிவில் இருந்தாலும் அதிக சுவை இந்த பழத்திற்கு உண்டு. கேரளாவில் விளையும் பாளையங்கோடை, ஏத்தப்பழம் போன்ற வாழைப்பழ வகைகள் தினந்தோறும் குமுளி, கம்பம்மெட்டு வழியாக வாகனங்கள் மூலம் தேனி மாவட்ட விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு செல்கின்றனர். இதனால் கம்பம், கூடலூர், காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட ஊர்களில் கேரள மலைவாழைப்பழங்கள் அதிகமாக கிடைக்கிறது.

தமிழகத்தில் விளையக்கூடிய பச்சை வாழை, ரஸ்தாளி, உள்ளூர் பாளையங்கோடை பழங்கள் மக்களால் அதிகம் வாங்கப்பட்டாலும், கேரளா வின் வாழைப்பழங்களை ருசித்து சாப்பிடுபவர்கள் அதிகம். கேரளாவிலேயே இதன் தேவை அதிகம் உள்ளது. இதனால் தேனி மாவட்டத்திற்கு நாளிப்பூவன் வரத்து குறைந்துள்ளது. விளைச்சல் குறைவிற்கு முக்கியமான காரணமே வாழைப்பழங்களின் விளைச்சல் குறைந்ததுதான் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது தென்மேற்கு பருவமழை கேரளாவில் அதிகளவு பெய்து வருகிறது. மலைச்சாரலில் பயிர் செய்யப்பட்டுள்ள நாளிப்பூவன் வாழை அதிகளவில் விளைந்துள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் இதன் வரத்து

கம்பம் உள்ளிட்ட ஊர்களுக்கு அதிகரிக்கும். விலை குறையவும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து கேரள விவசாயிகள் கூறுகையில், 'கேரளாவில் பெய்யும் தென்மேற்கு பருவமழை காரணமாக வாழை விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இவை விளைந்து கம்பம் உள்ளிட்ட ஊர்களுக்கு வரும்போது விலை குறைய வாய்ப்புகள் ஏற்படும்' என்றனர்.

## 2,600 டன் உரம் வருகை

மதுரை, : பெரியாறு மற்றும் வைகை அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டு தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள சுமார் 1.45 லட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாய பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களுக்கு தேவையான உரம் விஜயவாடாவில் இருந்து மதுரைக்கு கொண்டு வரப்படுவது வழக்கம். இதன்படி நேற்று 2,600 மெட்ரிக் டன் உரங்கள் ரயில் மூலம் மதுரை கூடல் நகர் குட்செஷட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இங்கிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கு தேவையான உரங்கள் லாரி மூலம் கொண்டு செல்லப்பட உள்ளது. இதற்கான ஏற்பட்டை விவசாய அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாய பணிகளுக்காக ஆந்திராவில் இருந்து சரக்கு ரெயிலில் 2,600 டன் உரம் மதுரை வந்தது**



விவசாய பணிகளுக்காக 2,600 டன் உரம் ஆந்திராவில் இருந்து மதுரைக்கு ரெயில் மூலம் நேற்று வந்தடைந்தது.

உரம்

இது குறித்து மதுரை வேளாண்துறை இணை இயக்குநர் ஜெய்சிங்ஞானதுரை கூறியதாவது:- கடந்த ஒரு மாதமாக தென்மேற்கு பருவமழை பெய்ததால், பெரியாறு, வைகை அணைகளில் போதிய அளவு தண்ணீர் தேங்கி உள்ளது. இதனையடுத்து மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் விவசாய பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. எனவே அந்த மாவட்ட விவசாய பணிகளுக்காக உரங்களை இருப்பு வைக்க அந்தந்த மாவட்ட நிர்வாகத்திற்கு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து தென் மாவட்டங்களுக்கு ஆந்திர மாநிலத்தில் இருந்து 2,600 டன் எடை கொண்ட உர மூட்டைகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இவை சரக்குரெயில் மூலம் நேற்று மதுரை கூடல்நகர் ரெயில் நிலையத்திற்கு வந்திறங்கின. குடோன்களில் சேமிப்பு

இதில் 500 டன் உரம் மதுரை மாவட்டத்திற்கும், மற்றவை ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தேனி உள்ளிட்ட மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளன. இவை குடோன்களில் சேமிக்கப்பட்டு உள்ளது. அங்கிருந்து விற்பனையாளர்கள் எடுத்து செல்வார்கள். உரம் விற்பனை குறித்து மதுரை மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. இதில் உர மூடைகளை கூடுதல் விலைக்கு விற்றாலோ, பதுக்கி வைத்தாலோ அல்லது பிற மாவட்டங்களுக்கு கள்ளத்தனமாக விற்றாலோகடும்நடவடிக்கைஎடுக்கப்படும்.

எச்சரிக்கை

இந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள அந்த குழுக்கள் உர விற்பனையாகர்களை தீவிரமாக கண்காணிக்கும். எனவே உர விற்பனையாளர்கள் சட்டதிட்டங்களை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

நடப்பு சந்தை பருவத்தில்

# அரிசி உற்பத்தி குறையும்

அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியாவில், நடப்பு 2014-15 சந்தை பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), அரிசி உற்பத்தி 10 கோடி டன்னாக குறையும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.

6 சதவீதம் குறையும்

கடந்த 2013-14 சந்தை பருவத்தில் அரிசி உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 10.65 கோடி டன்னாக இருந்தது. ஆனால் நடப்பு பருவத்தில் சென்ற ஆண்டைக் காட்டிலும் உற்பத்தி 6 சதவீதம் குறையும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.

பருவமழை பற்றாக்குறையாலும், அக்டோபர்-நவம்பர் மாதங்களில் கிழக்கு கடற்கரை பகுதிகளில் புயல்-மழை காரணமாக கரீப் நெல் அறுவடை பணிகளும், ரபி சாகுபடி பணிகளும் பாதிப்புக்குள்ளாகும். நடப்பு சந்தை பருவத்தின் மொத்த அரிசி உற்பத்தியில் கரீப் பருவத்தின் பங்கு 8.70 கோடி டன்னாகவும், ரபி பருவத்தின் பங்கு 1.30 கோடி டன்னாகவும் இருக்கும் என அமெரிக்க அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

கரீப், ரபி ஆகிய இரண்டு பருவங்களிலும் நெல் சாகுபடி நடைபெற்றாலும், அரிசி உற்பத்தியில் கரீப் பருவம்தான் அதிக பங்கினைக் கொண்டுள்ளது. இப்போது கரீப் பருவ நெற் பயிர் அறுவடைக்கு தயாராக உள்ளது. சில இடங்களில் ரபி பருவ நெல் சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளன.

மத்திய அரசின் முதல் கட்ட மதிப்பீட்டின்படி கரீப் பருவ அரிசி உற்பத்தி 8.80 கோடி டன்னாக இருக்கும் என தெரிகிறது. அசாம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாநிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், உத்தரபிரதேசத்தில் நிலவும் வறட்சியால் அரிசி உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.